போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும். இந்தப் பகுதியிலுள்ள அக்காமலை கிராஸ் hills, ஆனைமுடி Suicide Point, Monkey Falls, மாசாணியம்மன் திருக்கோயில், டாப் ஸ்லிப் போன்ற சுற்றுலாப் பயணிகள் அதிக அளவிலே வரக்கூடிய அப்பகுதிகளை சுற்றுலா மையமாக அறிவித்து, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வால்பாறை பகுதியில், மாநில அரசின் நிதி உதவியோடு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏதுவாக தங்கும் விடுதி கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவருடைய திருக்கரங்களால் விரைவிலே அவ்விடுதியை திறக்க இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஆழியாறு பகுதியில், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக, படகு குழாம் அமைக்கப்பட்டு, தற்போது சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்குத் தயாராக இருக்கின்றது. மேலும், அங்குள்ள ஆனைமலை மற்றும் கோயில் ஸ்தலங்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கெல்லாம் நேரடியாகச் சென்று, ஆய்வு செய்து, மாநில அரசின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் செய்து தரப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

பெருந்திட்ட வளாகம்

***6592—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 பிப்ரவரி 5]

(அ) திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் கட்டமைப்பு வசதிகள், மாவட்ட அளவிலான அரசுத் துறை தலைமை அலுவலகங்கள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 ஆம் ஆண்டு தமிழகத்தை இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உருவாக்க, புது யுகம் படைத்து வரும் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதமான பாதங்களை வணங்கி, வைர விழா கண்ட, இந்த சிறப்புமிக்க அவையில், சாதாரண விவசாயக் குடும்பத்தில், கடைக்கோடி கிராமத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராகவும், பேரூராட்சி கழகச் செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழகப் பணியாற்ற வாய்ப்பளித்து, மிட்டாமிராசுகள், பட்டயக்காரர்கள், பாளையக்காரர்களும்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக முடியும் என்ற நிலையினை மாற்றி, மகனும், மகளும், மருமகனும், வாரிசுகளும்தான் அமைச்சர்களாக முடியும் என்ற நிலையைக் கொண்டுள்ளவர்கள் மத்தியிலே, கடைக்கோடி தொண்டனான என்னை, விசுவாசம் என்ற கொள்முதலுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்துறை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, துறை சம்பந்தமான கேள்விகள் கேட்கும் இடத்திலிருந்த என்னை, வருவாய்த் துறை சம்பந்தமான கேள்விகளுக்கு பதிலளிக்கக்கூடிய வகையில் அமைச்சராகப் பணியாற்றும் வாய்ப்பளித்த, மழை கொடுக்கும் கொடையும் ஒரு இரண்டு மாதம்; வயல் கொடுக்கும் கொடையும் ஒரு மூன்று மாதம்; பசு கொடுக்கும் கொடையும் ஒரு நான்கு மாதம்; அம்மா, நீங்கள் தமிழக மக்களுக்கு கொடுக்கும் திட்டங்கள் அனைத்தும் நாளும் மாதம் (மேசையைத் தட்டும் ஒலி), அம்மா! தன்மேல் முள் தைத்தும் சிரிக்கின்ற ரோஜா மலர் போல, துன்பத்தைத் தூக்கி எறிந்து எங்களுக்காக சிரித்துப் பார்க்கின்றீர்கள். மலை மீது நிற்கும் மரத்திற்கு, நிலத்திற்கு மழை போல (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது வாழ்வின் வற்றாத அன்பு (மேசையைத் தட்டும் ஒலி) சிரபுஞ்சியாக வாழ்கின்றீர்கள்.

இப்போதும், எப்போதும் அனைவருக்கும் இறைவா, எங்களுக்கு அம்மா என்ற ஆனந்தத்தை மட்டும் நிறைவாகக் கொடுத்து விடு என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) பாராளும் எங்கள் தாயே! நாளை பாராளுமன்றத்தையும் ஆள இருக்கும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–05

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்ட மக்கள் தங்களது தேவைகளுக்காக ஒவ்வொரு அலுவலகமாக ஏறி, இறங்கக்கூடிய சிரமங்களைக் குறைக்கின்ற வகையிலும், பொது மக்களுக்கு ஏற்படுகிற போக்குவரத்துச் சிரமங்களைப் போக்குகின்ற எண்ணத்திலும், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டு வருகின்ற அனைத்து நலத் திட்ட உதவிகளும் ஒரே இடத்தில் கிடைத்திடவும், அனைத்து வகையான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பொது மக்கள் ஒரே இடத்தில் பெற்றிடவும், தமிழக வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு 34 துறைத் தலைமை அலுவலகங்கள் ஒரே இடத்திலே அமைத்திடுகின்றவண்ணம் வருவாய்த் துறையில் மிகப் பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையிலும், திருப்பூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்குகின்ற வகையிலும் 47.90 ஏக்கர் பரப்பளவிலே 103 கோடியே, 38 இலட்சத்து 93 ஆயிரத்து 800 ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் 12–10–2012 அன்று தாயுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டடப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

2013 பிப்ரவரி 5]

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலான அரசுத் துறைத் தலைமை அலுவலகம் திருப்பூரிலே அமைக்கப்பட்டிருக்கின்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு நன்றி. அதிலே எந்தெந்தத் துறைகளினுடைய தலைமை அலுவலகங்கள் அமையும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தத் துறைகளினுடைய அலுவலகங்கள் அமையப்பெற்றிருக்கின்றன என்று வினா எழுப்பி இருக்கின்றார்கள். மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், உதவி ஆணையர், கலால் அலுவலகம், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் மறுவாழ்வு அலுவலகம், மாவட்டத் தொழில் மையம், மாவட்டக் கருவூல அலுவலகம், உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம், மாவட்ட வழங்கல் அலுவலகம், தனித் துணை ஆட்சியர், மக்கள் குறை தீர்க்கும் பிரிவு அலுவலகம், மாவட்ட ஆட்சியரின் பொதுப் பிரிவு அலுவலகம், தேசிய தகவலியல் மையம், உதவி இயக்குநர், கனிமங்கள் அலுவலகம், உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் அலுவலகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மகளிர் திட்ட அலுவலகம், தேர்தல் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரப் பாதுகாப்பு அறை (மேசையைத் தட்டும் ஒலி), இணை இயக்குநர், வேளாண்மைத் துறை அலுவலகம், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம், தாட்கோ அலுவலகம், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் அலுவலகம், மாவட்ட பஞ்சாயத்து அலுவலகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம், உதவி இயக்குநர், கைத்தறி அலுவலகம், உதவி இயக்குநர், காதி மற்றும் கிராமத் தொழில் அலுவலகம், மாவட்ட நூலக அலுவலகம், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம், தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகம், உதவி ஆணையர், இந்து சமய

அறநிலையத் துறை அலுவலகம் (மேசையைத் தட்டும் ஒலி), கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் மற்றும் இணை இயக்குநர், தோட்டக்கலைத் துறை அலுவலகம் என 34 துறைகளை ஒருங்கிணைத்து இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத (மேசையைத் தட்டும் ஒலி) அளவிற்கு 34 துறைத் தலைமை அலுவலகங்களை உள்ளடக்கிய பெருந்திட்ட வளாகத்தை வருவாய்த் துறைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு திருப்பூர் மாவட்டத்திற்குத் தந்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னுமா கேட்கிறீர்கள்?

திரு. கே. தங்கவேல்: நன்றி சொல்லிவிடுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 6–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1) திரு. அ. பாப்பா சுந்தரம்

2) திரு. ஆர்.பி. உதயகுமார்

3) திரு. கே.பி. அன்பழகன்